செ.வெ.எண்.174 நாள்.23-02-2010

# பத்திரிக்கைச் செய்தி
# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை

மருந்து கட்டுப்பாடு இயக்குநரின் உத்திரவின்படி கடந்த வாரத்தில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவமனைகளோடு இணைந்த மருந்து கடைகள் / மொத்த விற்பனையாளர்கள் / இரத்த வங்கிகள் மற்றும் தகுதியற்ற போலி மருத்துவர்களால் நடத்தப்படும் மருத்துவமனைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மயிலாடுதுறையிலுள்ள நான்கு மருத்துவமனைகளோடு இணைந்த மருந்து கடைகளிலும், ஒரு மொத்த விற்பனையாளரிடமும் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்ட விதிகள் மீறல் கவனிக்கப்பட்டு, அவ்விற்பனையாளர்கள் மீது மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரத்த வங்கிளின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்து தஞ்சாவூரிலுள்ள இரண்டு தனியார் வங்கிகளில் ஆய்வினை மேற்கொண்டு, ஆய்வின் அடிப்படையில் இரண்டு இரத்த வங்கிகளின் இரத்தம் பெறுதல், சேமித்தல் மற்றும் விநியோகிப்பதை மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்ட விதிகளின் படி நிறுத்தி வைக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்த இயக்ககம், போலி மருத்துவர் திரு கரு.கார்த்திகேயன் சங்கரன்கோவிலில் நடத்தி வந்த மாரீஸ்வரி மருத்துவமனை வளாகத்தில் ஆய்வு

செய்யவும் வைத்திருந்த ரூ.50,000/– மதிப்புள்ள மருந்துகள் கைப்பற்றப்பட்டு சங்கரன்கோவிலில் உள்ள நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் ஆய்வின் அடிப்படையில் கரிவளம்வந்தநல்லூரில் இரண்டு மருந்து கடைகளின் மீது மருந்து மற்றும் அழகு சாதனச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் நான்கு மருந்து கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்ட விதிகளின் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இரண்டு மருந்து கடைகளின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வி.கு.சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9